# <u>திருப்பத்தூர் நகராட்சி</u>

2019 - ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 - ம் வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள் 21.11.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

118) திருப்பத்தூர் நகராட்சியில் செயல்படும் அம்மா உணவகத்திற்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள், கேஸ் சிலிண்டர் மற்றும் தயிர் ஆகியவை வாங்குவதற்கும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தோராய செலவீனம் ரூ.35.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1609/2015/அ1)

119) பொது சொத்துவரி சீராய்வு 2018 தொடர்பாக சொத்துவரி சீராய்வினை ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை செயலர் தலைமையில் குழு அமைக்கப்பட்ட கீழ்காணும் அரசாணை விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

1. அரசு ஆணை(நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (நநிIV) துறை
   நாள்:19.11.19
2. G.O.(MS)No.150, MA&WS(MA.IV) Dated: 19.11.2019

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. பொது சொத்துவரி சீராய்வு 2018 தொடர்பான பணிகள் அரசாணையில் தெரிவித்தவாறு நிறுத்தி வைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்:** அ1/1908/2018

120) பொது சொத்துவரி சீராய்வு 2018 நிறுத்தி வைப்பு செய்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை நாள்:19.11.2019-ஐ தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.40032/2012/R1 நாள்: 20.11.19-ன் படி பொது சொத்துவரி சீராய்வு 2018 மண்டல வழிகாட்டி மதிப்பு மற்றும் மறுஅளவீட்டு பணிகள் தொடர்பாக மாற்றி அமைக்கப்பட்ட சொத்துவரியினை நிறுத்திவைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்தவாறு சொத்துவரி சீராய்வு தொடர்பான பணிகள் நிறுத்தி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. பழைய சொத்துவரி கேட்பிற்கும் தற்போது திருத்திய அனைத்து வகையான சொத்துவரி கேட்பிற்கும் அதனுடன் தற்போது வரி விதிப்புதாரர்கள் செலுத்தப்பட்ட திடக்கழிவு பயன்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத் தொகையானது வருங்காலத்தில் செலுத்த வேண்டிய சொத்துவரி கேட்பில் ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** அ1/1908/2018

**121)** வேலூர் மாவட்டத்தை இரண்டாக பிரித்து திருப்பத்தூர் நகரத்தை புதிய மாவட்டமாக உருவாக்குதல் பணி **28.11.2019–**ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது. இவ்விழாவை முன்னிட்டு நகராட்சியின் மூலம் விழா ஏற்பாடுகள் செய்திட பொது மக்களுக்கு தற்காலிக கழிப்பிட வசதி, குடிநீர் வசதி , லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்தல், விழா திடல் பகுதி சுற்றி பொது சுகாதார பணிகள் செய்தல்,லாரியில் இன்ஜின் பம்புசெட் அமைத்து, Hose pipe மூலம் தண்ணீர் அளித்தும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அரசு கட்டிடங்களில் மின் விளக்குகள் அமைத்தல் மற்றும் இவ்விழாவினை செய்தி தாளில் விளம்பரம் செய்வது போன்ற அனைத்து பணிகளுக்கும் மதிப்பீடு தொகை ரூ.**18.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணிக்கு உண்டான செலவீனத்தை நகராட்சி பொது நிதி 2019–2020–ம் நிதியாண்டில் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2202/2019/இ1

**122)** இந்நகராட்சி அலுவலக பணிக்கு ஈப்பு வாகன எண். TN23-BP3026 ஆணையர் அவர்களால் பயன்படுத்தபட்டு வருகிறது. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டம் முடிந்து வரும்போது வாகனத்தில் பழுது ஏற்பட்டு நின்றுவிட்டது. மேற்படி பழுதினை சரிசெய்ய மகேந்திரா & மகேந்திரா ஜீப் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட "JAIN CARS & AUTO SALES (P) LTD, Vellore-என்ற நிறுவனத்தில் பழுதுகள் சரிசெய்ய மன்ற அனுமதிக்கும் அதற்கான செலவின தொகை ரூ.84,594/–ஐ நகராட்சி பொது நிதியில் வழஙகிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2088/2019/இ1)**

**123)** மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/23450/2019 நாள்.18.11.2019-ல் வேலூர் மாவட்டத்தை பிரித்து திருப்பத்தூர் புதிய மாவட்டமாக உருவாக்குதல் துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதையொட்டி, இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணி சிறப்பாக செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன்படி, விழா திடல் பகுதி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தூய்மை பணி மேற்கொள்ளவும், தற்காலிக கழிப்பறைகளை துர்நாற்றமின்றி தூய்மையாக வைக்கும் பொருட்டு பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி அரசு பதிவு பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்வீஸ், திருச்சி நிறுவனத்திலிருந்து நல்ல தரமான பினாயில் 200 லிட்டர் வாங்கி பயன்படுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.12,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ, திருச்சி நிறுவனத்திலிருந்து பினாயில் வாங்கி பயன்படுத்தவும், மேற்படி செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2192/2019/எச்1)

**124)** மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/23450/2019 நாள்.18.11.2019-ல் வேலூர் மாவட்டத்தை பிரித்து திருப்பத்தூர் புதிய மாவட்டமாக உருவாக்குதல் துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதையொட்டி, இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணி சிறப்பாக செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன்படி, விழா திடல் பகுதி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவுப் பணிகள் துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தேவையான தளவாட சாமான்கள் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தென்னந்துடப்பம் | 500 |
| 2 | மலார் - சிமார் | 200 |
| 3 | மூங்கில் கூடை(பெரியது) | 100 |
| 4 | மூங்கில் கூடை(சிறியது) | 200 |
| 5 | மண் அகற்றும் பிரஷ் (கை பிடியுடன்) | 60 |
| 6 | பிளாஸ்டிக் பக்கெட் சிறியது | 20 |
| 5 | பிளாஸ்டிக் பக்கெட் பெரியது | 20 |
| 6 | பிளாஸ்டிக் மக் சிறியது | 50 |
| 7 | பிளாஸ்டிக் | 150 |
| 8 | குப்பை அள்ளும் தகடு | 50 |
| 9 | மண் வெட்டி (கை பிடியுடன்) | 15 |

மேற்படி பொருட்கள் திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.80,000/-க்கு (எண்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை கருதி தளவாட பொருட்கள் வாங்கவும், மேற்படி செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2192/2019/எச்1)

**125)** மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/23450/2019 நாள்.18.11.2019-ல் வேலூர் மாவட்டத்தை பிரித்து திருப்பத்தூர் புதிய மாவட்டமாக உருவாக்குதல் துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதையொட்டி, இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணி சிறப்பாக செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன்படி, விழா திடல் பகுதி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் சிறப்பு தூய்மை பணிகள் மேற்கொள்ள வெளியூர் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு உணவு பொருட்கள் வாங்கிட அதற்கான தோராய செலவினம் ரூ.30,000/-க்கு (முப்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

சிறப்பு தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள் வாங்கிடவும் அதற்கான செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2198/2019/எச்1)

**126)** மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/23450/2019 நாள்.18.11.2019-ல் வேலூர் மாவட்டத்தை பிரித்து திருப்பத்தூர் புதிய மாவட்டமாக உருவாக்குதல் துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதையொட்டி, இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணி சிறப்பாக செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன்படி, விழா திடல் பகுதி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவுப் பணிகளை மேற்கொண்டு சுகாதார சீர் கேடுகள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி, அரசு பதிவு பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்வீஸ், திருச்சி நிறுவனத்திலிருந்து நல்ல தரமான 10000 கிலோ (10 டன்) சுண்ணாம்பு தூள் வாங்கி பயன்படுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ, திருச்சி நிறுவனத்திலிருந்து சுண்ணாம்பு தூள் வாங்கி பயன்படுத்தவும், மேற்படி செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2191/2019/எச்1)

**127)** மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/23450/2019 நாள்.18.11.2019-ல் வேலூர் மாவட்டத்தை பிரித்து திருப்பத்தூர் புதிய மாவட்டமாக உருவாக்குதல் துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதையொட்டி, இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணி சிறப்பாக செய்ய ஆணையிடப்பட்டுள்ளதன்படி, விழா திடல் பகுதி மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு தொற்று நோய்கள் பரவாத வண்ணம் பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி அரசு பதிவு பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்வீஸ், திருச்சி நிறுவனத்திலிருந்து நல்ல தரமான 33% சதவீதம் குளோரின் கொண்ட 3500 கிலோ (3.50 டன்) பிளீச்சிங் பவுடர் வாங்கி பயன்படுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ, திருச்சி நிறுவனத்திலிருந்து பிளீச்சிங் பவுடர் வாங்கி பயன்படுத்தவும், மேற்படி செலவின தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2190/2019/எச்1)

128) திருப்பத்தூர் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020–ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதியில் திட்டப்பணிகள் மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்ட பணிகளின் விவரம்.

| வ. எண். | வேலையின் விவரம் | செயல்முறை உத்திரவு கடிதங்களின் விவரங்கள் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சம் |
|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.32. வெஙகடேஸ்வரா நகரில் குடிநீர் விநியோகம் செய்ய 110mm PVC பைப்லைன் அமைத்தல் பணி. | மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர், அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண்.அ2/1646/2019, நாள்.06.10.2019. | 1.50 |
| 2 | திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.35, சிவசக்தி நகரில் குடிநீர் விநியோகம் செய்ய 90mm PVC பைப்லைன் அமைத்தல் பணி. | | 2.50 |

மேற்காணும் பணிகளின் செயல்முறை உத்திரவு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், வரப்பெற்ற மதிப்பீட்டு தொகைக்கு மேலாக கூடுதல் செலவினம் ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டைவிட கூடுதல் செலவினம் ஏற்பட்டால் இந்நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1976/2019/இ1)

**129)** திருப்பத்தூர் புதிய மாவட்ட துவக்க விழாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை புரிவதால் பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி, திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் தினசரி டெங்கு தடுப்பு பணிகள் 66 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுப்புழுக்களை கட்டுப்படுத்த அபேட் (டெமிபாஸ்) தினசரி நீர் சேகரிக்கும் இடங்களில் பயன்படுத்தவும், முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த பைரித்திரம் 2% பயன்படுத்தி புகை பரப்பபவும், பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி கீழ்குறிப்பிட்டுள்ள பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான அருணை எண்டர்பிரைசஸ், அடையார், சென்னை நிறுவனத்தில் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

| வ.எண் | பொருள் | அளவு | தொகை |
|---|---|---|---|
| 1 | அபேட் (டெமிபாஸ்) | 100 லிட்டர் | 1.00 இலட்சம் |
| 2 | பைரித்திரம் 2% | 100 லிட்டர் | 1.20 இலட்சம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான அருணை எண்டர்பிரைசஸ், அடையார், சென்னை நிறுவனத்தில் அபேட் (டெமிபாஸ்) பைரித்திரம் 2% வாங்கி பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2199/2019/எச்1)